# திராவிடப் போராளிகள்

44

■ வழக்கறிஞர் அருள்மொழி

**மறைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...**

# சட்டமன்றத்தில் தாயாரம்மாள்!



ஓவியம் : ரவி பேலட்

அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள் அவர்களின் ஆழ்ந்த படிப்பறிவும், பொது அறிவும், சமூகச் சிந்தனையும் அவருடைய சட்டமன்ற விவாதங்களில் முழுமையாக வெளிப்பட்டுள்ளன. அவற்றைப் படிக்கும்போது வியப்பு மேலெழுகிறது. இதோ சில விவாத குறிப்புகள்:

1932-ஆம் ஆண்டில் சென்னை மாகாண சட்டசபையில் மலையாளப் பகுதிகளில் வாழும் மக்களின் குடும்பச் சட்டங்கள் தொடர்பாக இரண்டு மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டன. ஒன்று நம்பூதிரி மசோதா (NAMBOODHIRI BILL) மற்றொன்று மெட்ராஸ் மருமக்கத்தாயம் மசோதா.

நம்பூதிரி குறித்த சட்டமானது மலையாளச் சமூகத்தில் நம்பூதிரிக் குடும்பங்களில் மூத்த ஆண்மகனுக்கு மட்டுமே திருமணம் செய்யும் வழக்கமிருந்தது. இளையவர்கள் நாயர் குடும்பத்துப் பெண்களோடு ‘சம்பந்தம்’ என்ற முறையில் உறவு கொண்டு வாழ்வது. இந்தக் கொடுமையான சமூக வழக்கத்தால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் நம்பூதிரிப் பெண்களே. உயர்சாதிப் பெருமை என்ற போர்வையில், அவர்கள் வீட்டுக்குள்ளேயே முடக்கப்பட்டார்கள் பல பெண்கள் திருமணமே நடக்காமல் வாழ்ந்து இறந்து போனார்கள். அதேபோல நாயர் குடும்பத்துப் பெண்களிலும் பலர் தங்களை நம்பூதிரிகளின் உடைமையாக நடத்துவதை எதிர்த்துக் குரல் கொடுத்தார்கள். இந்தத் தவறான விதிமுறைகளை, சட்டப்படி தடுத்து நிறுத்துவதற்காக உருவாக்கப்பட்டது நம்பூதிரி மசோதா. அந்தத் திருத்த சட்டத்தை ஆதரித்து, அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள் சட்டமன்றத்தில் பேசினார்.

## நம்பூதிரிச் சட்ட மசோதா

27.01.1932 அன்று முன்வைக்கப்பட்ட நம்பூதிரிச் சட்டம் (THE NAMBOODHIRI BILL) பற்றி அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள் பேசியது:

“நான் மலையாள மாதல்லவாகினும் பொதுவாய் சீர்திருத்தம் அவசியம் என்று பேசுகின்றேன். மலையாள மாதர்கள் மலைநாட்டைவிட்டு ஒருபோதும் வெளியே வாரார்கள். ஆண்களும் பெண்களும் அதிகமாய் படித்து வெளியேறி சீர்திருத்தம் பெற ஆசை கொள்ளும் இக்காலத்தில் நம்பூதிரிச் சட்டம் தந்திருப்பது மிகவும் பொருத்தம் உடையது. இது அவசியமென்பதே பலரின் அபிப்பிராயம்.

தேச சமூகச் சீர்திருத்தத்தையும் நல்லொழுக்கத்தையும், கற்பிக்கக்கூடியவர்கள், விவாகமானது. தெய்வீகச் சடங்கு, ஒரு சம்ஸ்காரம் என்று சொல்ல வேண்டியவர்களாயிருந்தும், தங்கள் சுயஜாதிப் பெண்களைக் கல்யாணம் செய்யாது கன்னிகைகளாய்ச் சிறையில் அடைத்து ஹிம்சித்து, நாயர் மாதாக்களை ஒழுங்கீனமான வழியில் சம்பந்தமென்னும் ஒப்பந்தத்தில் வைத்து, காலம் தள்ளி வருகின்றார்கள்... விருத்த விவாகங்கள் பலமண வாழ்க்கை, கன்னிகைகளாயிருத்தல் முதலிய நிர்ப்பந்தங்களுக்கு நம்பூதிரிப் பெண்களும் இனிமேல் உடன்படமாட்டார்கள் என்பது நிச்சயம், நீதி நியாயங்களை ஒட்டி மதாசாரம், குலாசாரம், தேசாசாரம் மாறுபட்டு வருகின்றன. நம்பூதிரிகளுக்குள் முதல் பிள்ளைக்குத்தான் விவாகம். மற்ற பிள்ளைகளுக்கு விவாகமே இல்லை என்பது என்ன அநியாயம், சம்பந்தமென்னும் படுகுழியில் பகுத்தறிவுள்ள எந்தப் பெண்ணும் இனிமேல் விழமாட்டாள். எந்தப் பெண்ணும் விவாகமின்றிச் சிறையிருக்கவும் இனிமேல் முடியாது.

எல்லாரும் இந்திய மக்கள் ஆகையால், நாகரீகமான வழியில் நம்பூதிரி பில்லும் நன்கு நிறைவேற வேண்டுமென்று திரிகரணச் சுத்தியாய் ஆதரிக்கின்றேன்.

சென்னை கவர்ன்மென்ட்டின் லா மெம்பர் கனம் கிருஷ்ணன் நாயர் அவர்களும் மலையாளியாகவும் அவர்கள் தேசத்தின் பழக்கவழக்கங்களையும், கஷ்ட நஷ்டங்களையும், நன்குணர்ந்தவர்களாயும் இருப்பதால், இச்சட்டத்தை ஆதரித்து நன்கு நிறைவேற்றி வைப்பாரென்று நம்புகின்றேன்”.

## கோயில் நுழைவுக்கு ஆதரவு

அதேபோல மருமக்கத்தாயம் மசோதாவை ஆதரித்துப் பேசும்போது, மலபார் நம்பூதிரிப் பெண்களின் துயரத்தைப் பற்றிக் குறிப்பிட்டுப் பலதாரமணம் சட்டப்படி தடைசெய்யப்பட்டாலன்றி அந்தப் பெண்களின் வாழ்வுக்கு விடிவில்லை என்பதை வலியுறுத்தினார். ஒரு சட்டம் இயற்றப்படும்போது அதுதொடர்பான பெண்களின் கருத்துகளைக் கேட்டு அவற்றையும் ஏற்றுக்கொண்டு தான் சட்டத்தை உருவாக்கவேண்டும் என்றும் மலையாளப் பெண்களின் உரிமைக்காக முழங்கியது அம்மையாரின் பரந்த பார்வையைக் காட்டுகிறது.

1932-ஆம் ஆண்டு நவம்பர் 1 அன்று ஜாதி வேறுபாடில்லாமல் அனைவரும் குறிப்பாக ஆதிதிராவிடர்கள் அனைத்துக் கோயில்களிலும் உள்ளே சென்று வழிபாடு செய்யும் உரிமையை வலியுறுத்தி, ‘கோயில் நுழைவுத் தீர்மானத்தை’ முன்மொழிந்தார் டாக்டர் சுப்புராயன் அவர்கள். அதனை ஆதரித்து அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள் பேசியது வரலாற்றுச் சிறப்புமிக்க உரையாகும்.

‘‘கடவுளின் படைப்பில் மனிதர்கள் சமமானவர்களே. பிறப்பில் உயர்வுமில்லை, தாழ்வுமில்லை. அனைவரையும் காப்பாற்றும் கடவுளை வழிபட ஆதிதிராவிடர்கள் உட்பட அனைவருக்கும் உரிமையுண்டு. தாங்கள் மற்றவர்களுக்குச் சமமானவர்களாக இருக்கிறோம் என்று ஆதிதிராவிடர்கள் உணரவேண்டும். ஜாதி இந்துக்கள் அவர்களைத் தாழ்வாக நடத்துவதால்தான் அவர்கள் கிறிஸ்தவத்தையோ இஸ்லாத்தையோ தழுவுகிறார்கள்’’ என்று வாதிட்டதோடு திருவள்ளுவர், கவி.வேமண்ணா, சங்கரர் ராமானுஜர், சைதன்யர், கபீர், குருநானக் என்று அடுக்கடுக்காக ஆதாரங்களைக் காட்டினார்.

சென்னையின் புகழ்பெற்ற மகப்பேறு மருத்துவ மனையாக ‘கோஷா ஹாஸ்பிடல்’ (தற்போது கஸ்தூரிபாய் காந்தி மருத்துவமனை) செயல்படும் முறை பற்றியும் அந்த மருத்துவமனையின் கட்டமைப்புக்கு என்னென்ன தேவை என்பதையும் அவர் வாதிட்ட முறையானது வியப்புக்குரியதாகவுள்ளது.

அதேபோல் 1933-ஆம் ஆண்டு சட்டமன்ற விவாதத்தில் வகுப்புவாரி உரிமை பற்றி அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள் ஆற்றிய உரை ஆய்வுக்குட்பட்ட ஆராய்ச்சிக்குரியது.

“முன்சீப்கள், மாவட்ட நீதிபதிகள் மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகள் பதவிகளிலும் உரிய பிரதிநிதித்துவம் இல்லாத (ADEQUATE REPRESENTATION) சமூகங்களுக்கு முன்னுரிமை வழங்கவேண்டுமென்றும் நீதித்துறை, கல்வித் துறை, மருத்துவத் துறை ஆகியவற்றில் பிற்படுத்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கவேண்டும்’’ என்றும் அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள் வாதிட்டார்.

## தாய்மொழிகளில் உரைகள்

இன்றைய சட்டசபை நிகழ்வுகள், நமது தமிழ்மொழியில் எளிதாகப் பதிவு செய்யப்படுகிறது என்றால் அதற்கான அடிப்படைப் பணிகளை ஆங்கிலேயர் ஆண்டபோதே முன்னெடுத்தவர் அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள். அதற்கு 1932-ஆம் ஆண்டு மார்ச் 15-ஆம் தேதியிட்ட சட்டசபைப் பதிவுகள் சான்றாக இருக்கின்றன.

## மெக்காலே கல்விமுறைக்குப் பாராட்டு

இந்திய சுதந்திரம் மற்றும் மாகாணங்களுக்கான சுயாட்சி உரிமை பற்றியும் சட்டமன்றத்தில் வாதிட்டவர் அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள். மெக்காலே கல்வி முறையால்தான் இந்தியர்கள் பலர் படிக்கவும் சிந்திக்கவும் வாய்ப்பு ஏற்பட்டது என்பதை அழுத்தம் திருத்தமாகக் கூறினார்.

சட்டமன்றங்களில் இரண்டு அவைகள் (BI-CAMERAL) (பேரவை, மேலவை) என்ற அமைப்பு இருக்கவேண்டும் என்று வாதிட்டார். தனது வாதத்துக்கு ஆதரவாக இங்கிலாந்து, அமெரிக்கா, ஃபிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகளின் அமைப்பு முறைகளை எடுத்துக் காட்டினார். எந்த ஒரு விவாதமாக இருந்தாலும் அதில் அலர்மேலு மங்கைத் தாயாரம்மாவின் வாதங்கள் தொலை நோக்குப் பார்வை கொண்டவையாக அமைந்திருந்தன.

கல்வி, காவல்துறை, சுங்கம், மருத்துவம் என்று அனைத்துத் துறைகளிலும் அவரது அறிவார்ந்த பதிவுகள் சட்டமன்றத்தில் இடம்பெற்றன.

சென்னை மாகாண சட்டசபையில் (THE MADRAS LEGISLATIVE கவுன்சில்) அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள் எழுப்பிய முதன்மையான கோரிக்கை, சட்டசபையில் தமிழ்ப் பேசும் உறுப்பினர்களுடைய உரைகள் தமிழில் தட்டச்சு செய்யப்பட வேண்டும் என்றும், அதுபோல் பிறமொழிகளிலும் பேசுவதைப் பதிவு செய்ய அந்தந்த மொழிகளில் சுருக்கெழுத்து (SHORTHAND) பயிற்சியில் தேர்ச்சி பெற்றவர்கள் பணியில் அமர்த்தப்பட வேண்டும் என்பதாகும். அவருடைய கோரிக்கைக்குப் பதிலளித்த சர் கே.வி ரெட்டி நாயுடு என்பவர் அம்மையாரின் தீர்மானத்தை ஆதரித்தாலும் தமிழில் பேசும் சட்டசபை உறுப்பினர்கள் 5 பேர் மட்டுமே என்று குறிப்பிட்டார்.

காலம் சில அருமணிகளை மூடிவைத்து விடலாம். ஆனால், அந்த மணிகளைத் தேடி எடுத்து, அவற்றின் ஒளிவீச்சில் பதிந்திருக்கும் நுட்பங்களைப் புரிந்துகொண்டால்தான் அறிவார்ந்த சமூகம் உருவாக முடியும். அந்தப் பயணத்தில் அலர்மேலு மங்கைத் தாயாரம்மாளின் பதிவுகள் இன்றும் மங்காது சுடர்விடுகின்றன.

(வருவார்கள்...)

## தமிழ் இலக்கியத்துக்கு ஆங்கிலத்தில் அங்கீகாரம்!

தமிழ்நாட்டின் மேற்கு மண்டலத்தின் மனிதர்களையும் சூழலையும் நில அமைப்பையும், கிராமப்புற வாழ்வியலையும் தனது கதைகள் மூலம் வாசகர்களுக்குக் கடத்துபவர் பெருமாள் முருகன். இந்தாண்டு அவர் எழுதிய ‘பூக்குழி’ நாவலின் ஆங்கில மொழிபெயர்ப்பு சர்வதேச புக்கர் விருதின் நெடும் பட்டியலில் இடம்பெற்று சர்வதேச அளவில் கவனம் குவித்தது.

நம் ஊரில் ‘ஜே.சி.பி’ என்றால், இடிக்க, தோண்ட, மேடு பள்ளங்களைச் சமன் செய்யப் பயன்படும் மஞ்சள் நிற எந்திரம்தான் நினைவுக்கு வரும். அதே ஜே.சி.பி நிறுவனம் தனது கார்ப்பரேட் சமூகப் பொறுப்பின் காரணமாக ஏற்படுத்திய அமைப்பான, ‘ஜே.சி.பி இலக்கிய அறக்கட்டளை’ மூலம் கடந்த ஆறு ஆண்டுகளாக இந்திய மொழிகளில் எழுதப்படும் படைப்புகளை அவற்றின் ஆங்கில மொழியாக்கங்கள் மூலம் தேர்ந்தெடுத்து ஆசிரியருக்கும் மொழிபெயர்ப்பாளருக்கும் ரூ.35 இலட்சம் (எழுத்தாளருக்கு ரூ.25 இலட்சம், மொழிபெயர்ப்பாளருக்கு ரூ.10 இலட்சம்) பரிசு வழங்கி வருகிறது.

2023-ஆம் ஆண்டுக்கான ஜே.சி.பி இலக்கிய விருது பெருமாள் முருகனின் ‘ஆளண்டாப்பட்சி’ நாவலின் ஆங்கில மொழிபெயர்ப்பான ‘ஃபையர் பேர்ட்’ நூலுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஜனனி கண்ணன் இந்நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். பெங்குயின் ரேண்டம் ஹவுஸ் இந்நூலைப் பதிப்பித்துள்ளது. விருது பெற்றதற்காகத் தமிழ்நாடு முதலமைச்சர் நூலாசிரியரையும், மொழிபெயர்ப்பாளரையும் பாராட்டியிருக்கிறார்.

## ஃப்ளாஷ்பேக்



### எடுத்துக்காட்டான உழைப்பு!



மயில்சாமி

1993 ஆம் ஆண்டில் கழகம் பிளவை சந்தித்த பிறகு, தமிழ்நாடு முழுக்கத் தொண்டர்களை உற்சாகமூட்டும் வகையிலும் கட்சியைக் கட்டுக்கோப்பாக வழிநடத்தும் விதமாகவும் பல்வேறு கூட்டங்களை, தமிழ்நாடு முழுக்க ஏற்பாடு செய்தார் தலைவர் கலைஞர். அதன் ஒரு பகுதியாக 1995-ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த ஈரோடு மாவட்டம், தாராபுரத்தில் தேர்தல் நிதி அளிப்புப் பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. தலைவர் கலைஞருடன் தாராபுரம் நகரச் செயலாளராகப் பொறுப்பு வகித்த என்னுடைய பெரியப்பா ஜோதி பழனிச்சாமி அவர்களும் ஒரே மேடையில் வீற்றிருந்தார். இன்றைக்கு எங்கள் குடும்பம் கழகப் பணியாற்ற பெரியப்பாவின் இத்தகைய உழைப்பு பெரும் எடுத்துக்காட்டாக இருக்கிறது.

**-மயில்சாமி, கிளைப் பிரதிநிதி, தாராபுரம்.**


இது போன்ற அரிய புகைப் படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

### கருவூலம்

## ஆளுநரைப் பதவி விலக்கிய குடியரசுத் தலைவர்!

**1977-ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் ஆளுநராக நியமிக்கப்பட்டவர் பிரபுதாஸ் பட்வாரி. அதன் பின்னர் 1980-ஆம் ஆண்டு, ஒன்றியத்தில் ஆட்சிமாற்றம் ஏற்பட்ட பிறகு ஆளுநர் பதவியை விட்டு பட்வாரி தானாக விலகுவார் என எதிர் பார்க்கப்பட்டது. ஆனால், அவர் விலகவில்லை. பிறகு, அவரை ராஜினாமா செய்யும்படி ஒன்றிய அரசு கோரியும், பட்வாரி மறுத்து வந்தார். அதன் காரணமாக அந்த ஆண்டு அக்டோபர் இறுதியில் ஆளுநர் பதவியில் இருந்து பட்வாரியை விலக்கி குடியரசுத் தலைவர் ஆணை பிறப்பித்தார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 307




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131